ජාතික ප්‍රතිපත්ති,ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම් හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන, වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள்,பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு
Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development, Vocational Training&Skills Development and Youth Affairs

"මිලෝදා" පළමු මහළ, බ්‍රිස්ටල් වීදිය, කොළඹ 01. 'மிலோதா', 1ஆம் மாடி, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01."Miloda" 1st Floor, Bristol Street, Colombo 01.

මගේ අංකය / எனது இல / My No: MNPEA/PLN/Pl/2019 | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 10.01.2019

சுற்றுநிருப இல: *MNPEA 02/2019*

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,
சகல அரசாங்க கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட நிறுவனங்கள் / அரசுடமை தொழில் முயற்சிகளின் தலைவர்கள்,

## பொது முதலீட்டுக்காக அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல்கள்

பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் (PIP) உள்ளடக்குவதற்காக அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் செயன்முறையை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியதன் தேவையை அரசாங்கம் உணர்ந்துள்ளது. தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சானது இடைக்கால வரவு செலவுத்திட்டச் சட்டகத்திற்குள் (MTBF) அரசாங்கத்தின் முதலீட்டு முன்னுரிமைப்படுத்தற் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காகக் கருத்திட்ட அங்கீகார செயன்முறையை நெறிப்படுத்தவும், அவ்வாறே முதலீட்டுக்காக மிகவும் பொருத்தமான மற்றும் பெறுபேறு சார்ந்த கருத்திட்டங்களை இனங்காணும் நோக்கில் கருத்திட்ட இனங்காணல் / சமர்ப்பிப்பு மற்றும் மதிப்பீட்டு செயன்முறைகள் ஆகிய இரண்டையும் நியாயப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எனவே, இவ்வழிகாட்டல்கள் இணைந்த நிதியத்தின் கீழ் அபிவிருத்தி முன்மொழிவுகளை ஆரம்பிப்பதற்கு கோரிக்கை விடுக்கின்ற நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுடமை தொழில் முயற்சிகளுக்கு (SOEs) நடைமுறை வழிகாட்டலை வழங்குகின்றன. இவ்வழிகாட்டல்களின் செயற்பரப்பானது அரசாங்கத்தின் அனைத்து புதிய முயற்சிகளையும், தற்போதுள்ள அரசாங்க கருத்திட்டங்களின் செயற்பரப்பு மாற்றங்களையும் மதிப்பாய்வதற்காகும். ஏதாவதொரு அரசாங்க கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அரசுடமை தொழில் முயற்சி அரச நிதிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் முதலீடொன்றினை மேற்கொள்வதாக இருந்தால் கீழ் குறிப்பிடுகின்ற வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும்.

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 4461500
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011- 2322867, 011-2339732
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: info@mnpea.gov.lk
Website: www.mnpea.gov.lk

இச்சுற்றுநிருபமானது பின்வரும் செயன்முறைகளின் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை விபரிக்கின்றது.

1. கருத்திட்டங்களை வடிவமைத்தல் / தயாரித்தல்
2. கருத்திட்ட சமர்ப்பிப்பு மற்றும் மதிப்பீடு
3. கருத்திட்டங்களின் பரிந்துரை /அங்கீகாரம்

## 1. கருத்திட்டங்களை வடிவமைத்தல் / தயாரித்தல்

### 1.1 கருத்திட்டத்தை வடிவமைத்தல்

அ) துறை ரீதியிலான தேவையின் அடிப்படையில் புதிய கருத்திட்டங்களையும் முயற்சிகளையும் இனங்காண்பது உரிய அரசாங்க நிறுவனங்களின் பொறுப்பாகும். குறித்த துறைகளில் நீண்டகாலமாக உணரப்பட்ட தேவைகளுக்கு அரசாங்கத்தின் மூலோபாய முன்னுரிமைப்படுத்தல்களின் வழிநின்று தீர்வுகளை முன்வைக்கும் கருத்திட்டங்களையே முதலில் கவனத்திற்கொள்ள வேண்டும். அத்துடன், அவ்வாறான முன்மொழிவுகள் நிலையான பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களின் ஒட்டுமொத்த நலன்புரி சேவைகளை மேம்படுத்தும் தனித்துவமான புத்தாக்கக் கருத்துக்களைத் தழுவி இருக்க வேண்டும்.

(ஆ) கருத்திட்டங்களின் பொருத்தமானது அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக நோக்கங்களில் தங்கியுள்ளது. எந்தவொரு தேசிய திட்டத்தையும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உருவாக்காது பரந்தளவில் தேசிய அல்லது துறைவாரியான நோக்கங்களை எய்துவதற்கு தயாரிக்கப்பட்ட மிகவும் பெரிய துறைவாரியான நிகழ்ச்சித்திட்டத்தின்/ பெருந்திட்டத்தின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகவே உருவாக்கப்பட வேண்டும். மேலும், முன்மொழிவு தேறிய பொருளாதார மற்றும் / அல்லது சமூக நலன்களை சுட்டிக்காட்ட வேண்டும். முன்மொழிவில் செலவுகள் மற்றும் நலன்களையும், மற்றும் கருத்திட்ட பகுப்பாய்வுடனா அல்லது பகுப்பாய்வின்றியா என விளக்கமாக குறிப்பிட வேண்டும்.

இ) பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், வறுமைக் குறைப்பு, வாழ்க்கைத்தர மேம்பாடு, நீதியான வருமானப் பகிர்வு, வெளிநாட்டுச் செலாவணி சேமிப்பு மற்றும் ஏற்றுமதி மேம்பாடு என்பற்றுக்கு தற்போதுள்ள பங்களிப்பினை விட கருத்திட்டத்தின் பங்களிப்பானது சிறந்ததாக இருக்கும் எனவும், அது தனியார் துறை வெளியேறிச் செல்லும் ஒரு தலையீடாக அமையாது எனவும், அங்கு நிதி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை பேணப்படும் எனவும் குறித்த கருத்திட்ட முன்மொழிவில் நியாயப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

ஈ) கருத்திட்டங்கள் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிகவும் குறைவான செலவையும் மிகவும் சாத்தியமான தீர்வினையும் கருத்திற்கொள்ள வேண்டும். அனைத்து அரசாங்க முதலீடுகளும் எதிர்கால நலனை கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், வளங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதனால் முதலீட்டு முன்னுரிமைப்படுத்தல் அதிகளவில் ஊக்குவிக்கப்படுகின்றது.

உ) இனங்காணப்பட்ட கருத்திட்டங்கள் பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் தொழினுட்ப முன்னோக்குகளில் மதிப்பினை காண்பிப்பதாகவும், அதனால் உடனிணைந்த இடர்களை கருத்திற்கொண்டு இவ்வகையான அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்துவது சாத்தியமானதென வலியுறுத்துவது அத்தியாவசியமானது. மேற்கூறப்பட்ட முன்னோக்குகளில் இடர்களை நிர்வகித்து அவற்றைக் குறைக்க வேண்டும்.

ஊ) மேலும், முன்மொழிவுகளின் நிர்வாகமானது நேரம் தவறாமை மற்றும் உரிய விடாமுயற்சி என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், தகவல் முகாமையில் ஒருங்கிணைப்பினை வெளிக்காட்ட வேண்டும். அத்துடன், துறை ரீதியான அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் துறைகளுக்கு மத்தியிலும் அதேபோன்று ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலும் உள்ள கருத்திட்டங்களை பிரதிபண்ணும் செயற்பாட்டை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எ) கருத்திட்டத்தின் நிலைபேற்றை உறுதிப்படுத்துவதற்கு செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பில் (O&M) போதியளவு கவனம் செலுத்த வேண்டும்.

## 1.2 கருத்திட்டங்களின் வகைப்பாடு

கருத்திட்டங்களை கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவின் (TEC) அடிப்படையில் மாபெரும், பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் நுண் கருத்திட்டங்களென கீழ்வருமாறு வகைப்படுத்த முடியும்.

| **கருத்திட்ட வகை** | **மொத்த மதிப்பீட்டுச் செலவினம் (TEC) (ரூபா. மில்லியன்)** |
|---|---|
| மாபெரும் | 10,000 ஐ விட மேற்பட்டது |
| பெரியது | 1,000 – 10,000 |
| நடுத்தரமானது | 100 – 1,000 |
| சிறியது | 10 – 100 |
| நுண் | 10 ஐ விட குறைந்த |

நுண் கருத்திட்டங்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (NPD) அங்கீகாரத்தினைப் பெறாது உரிய நிரல் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் அமுல்படுத்த முடியும். ஒரு திட்டத்தை பல கட்டங்களாக்கவோ அல்லது வெவ்வேறான பகுதிகளாக பிரிப்பதற்கோ அல்லது அதனை சிறிது சிறிதாக அமுல்படுத்துவதற்கோ அனுமதிக்கப்படமாட்டாது. மேலும், செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் அமுல்படுத்தப்படவுள்ள ஒரு நுண் கருத்திட்டத்தின் கருத்திட்ட முன்மொழிவானது அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதுடன், அமைச்சின் செயலாளர் அமுலாக்கலுக்கு எழுத்துமூல அங்கீகாரத்தை கட்டாயம் வழங்குவதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்கு (NBD) பிரதிகளை அனுப்ப வேண்டும்.

மாபெரும், பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான கருத்திட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ள கருத்திட்ட சமர்ப்பிப்பு மற்றும் மதிப்பீட்டு செயன்முறையை பின்பற்ற வேண்டும். எனினும், சிறியளவிலான கருத்திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மதிப்பீட்டுச் செயன்முறை மாத்திரம் செல்லுபடியாகுவதுடன் அதன் பரிந்துரைகள் இறுதி அங்கீகாரமாக கருத்திற்கொள்ளப்படும். ஒரு சில சிறியளவிலான கருத்திட்டங்களை கருத்திற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையென தேசிய திட்டமிடல் திணைக்களம் கருதும் பட்சத்தில் அது தொடர்பாக தேசிய திட்டமிடல் திணைக்களம் செயற்படும்.

## 2. கருத்திட்டத்தைச் சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்தலும்.

i. கருத்திட்டத்தை உருவாக்கியதன் பின்னர், அதனை செயலாளர் / பிரதம செயலாளரினூடாக அவரின் ஒப்புதல் மற்றும் பரிந்துரையுடன் மதிப்பீட்டுக்காக

தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும். எனினும், மாகாணப் பிரதம செயலாளர்களினால் அனுப்பப்படும் முன்மொழிவுகளை உரிய நிரல் அமைச்சினூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

ii. முன்மொழிவு கிடைக்கப்பெற்றதும் கீழ் குறிப்பிடும் இரு படிமுறைகளில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கருத்திட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

## 2.1 பூர்வாங்க மதிப்பீடு

கருத்திட்ட எண்ணக்கருக்கள் இணைப்பு 1 இல் கிடைக்கின்ற *"கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவம் மற்றும் செயற்பாட்டுக் கையேடு"* வார்ப்புருவினைப் (Template) பயன்படுத்தி தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (www.mnpea.gov.lk/ www.npd.gov.lk)

இக்கட்டத்தில் ஏதாவது விரிவான ஆய்வினை / முற்சாத்தியவள ஆய்வினை சமர்ப்பிப்பது மதிப்பீட்டு செயன்முறைக்கு பயன்மிக்கதாக இருக்கும். தேசிய திட்டமிடல் திணைக்களமானது கருத்திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு இரு வாரங்களுக்குள் மதிப்பீட்டினை ஆரம்பிக்கும். முன்மொழிவில் அத்தியாவசியமான தகவல்கள் / தரவுகள் குறைவாக இருப்பின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் முன்மொழிவு தொடர்பான மேலதிக தகவல்கள் வேண்டப்படும். கருத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் தேசிய திட்டமிடல் திணைக்களமானது சிக்கல் நிலை மற்றும் கருத்திட்டத்தின் அளவு என்பற்றைக் கருத்திற்கொண்டு நிறுவனம் முற்சாத்திய வள ஆய்வினை உருவாக்க வேண்டுமா அல்லது மேலதிக பரிசோதனை தேவைப்படுமா என அறிவிக்கும்.

ஆரம்பக்கட்ட மதிப்பீட்டுப் படிமுறையின் போது கருத்திட்டமொன்றை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை பிரமாணங்களாவன:

அ) கருத்திட்டமானது அரசாங்கத்தின் தேசிய மற்றும் துறைவாரியான கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களின் வழிநின்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பது
ஆ) கருத்திட்டத்தின் நிலைபேறான அம்சங்களுடன் விபரமாக அளவிடப்பட்டுள்ள செலவும் பயன்களும்

## 2.2 விரிவான மதிப்பீடு

இரண்டாவது கட்டத்தில் சாத்தியவள ஆய்வுடன் விரிவான ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டதும் தேசிய திட்டமிடல் திணைக்களம் விரிவான மதிப்பீட்டினை மேற்கொள்ளும். தீர்மானிக்கப்பட்ட பிரமாணங்களுக்கேற்ப கருத்திட்டங்களின் தகுதிகள் மற்றும் ஏற்புடைமை என்பவற்றை கருத்தில் கொண்டதன் பின்னர் ஒரு திட்டத்துக்கு நிதியிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட முன்னருள்ள இறுதி படிமுறை இதுவென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கட்டத்தில் விபரிக்கப்படுகின்ற கருத்திட்டத்தின் சாத்தியநிலையானது குறிக்கோள்கள் தொடர்ந்தும் பொருத்தமானவையாக இருக்குமா எனவும், செலவுகள் நியாயமானவையாக அமைந்திருக்குமா எனவும், கருத்திட்டமானது தொழினுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் சாத்தியப்பாடுடையதா எனவும், மேலும் இடர்களைத் தணிப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா எனவும் அறிவியல் பூர்வமாக மதிப்பிடுவதற்காகும்.

3. **கருத்திட்டத்தின் பரிந்துரை / அங்கீகாரம்**

மாபெரும், பெரிய மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்டங்களுக்கான அங்கீகரித்தல் செயன்முறையானது ஆரம்பநிலை அங்கீகாரம் மற்றும் இறுதி அங்கீகாரம் என இரு கட்டங்களைக் கொண்ட அங்கீகரித்தல் செயன்முறையை உள்ளடக்கியுள்ளது.

**3.1 பூர்வாங்க அங்கீகாரம்**

பூர்வாங்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதும் தேசிய திட்டமிடல் திணைக்களமானது வெளிநாட்டு நிதியுதவி ஏற்பாடுகளுக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கும் (ERD), உள்நாட்டு நிதியுதவிக்காக தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்கும் அதன் பரிந்துரைகளை உரிய நிரல் அமைச்சுக்கு ஒரு பிரதியிட்டு சமர்ப்பிக்கும்.

இப்படிமுறை பூர்த்தியடைந்ததும், உரிய நிரல் அமைச்சு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் கருத்திட்ட முன்மொழிவினை பூர்வாங்க அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விரிவான கருத்திட்ட முன்மொழிவுடன்/ சாத்தியநிலை ஆய்வுடன் தொடர்ந்து செயற்படுவதா என தீர்மானித்து கருத்திட்ட எண்ணக்கருவுக்கு அமைச்சரவையிலிருந்து பூர்வாங்க அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விரிவான கருத்திட்ட முன்மொழிவு கருத்திட்டத்தின் முழுமையான செயற்பரப்பு, செலவு விபரங்கள் மற்றும் நிதியியல், சமூக, தொழினுட்ப, இடர்கள் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை உள்ளடக்கி இருக்கும். வெளிநாட்டு நிதியுதவி எதிர்பார்க்கப்படுவதாயின் ஆரம்பத்தில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது கருத்திட்டத்தின் இயல்பினை கருத்திற்கொண்டு மிகவும் சாத்தியமான வெளிநாட்டு நிதியுதவி மூலங்களை மதிப்பிட வேண்டும்.

கீழ் குறிப்பிடுகின்ற பிரமாணங்களின் அடிப்படையில் நிதியிடல் மூலம் தீர்மானிக்கப்படும்.

அ) துறைவாரியான உச்ச வரம்பினுள் உள்நாட்டு நிதியிடலுக்கு குறிப்பீடு செய்ய வேண்டிய கருத்திட்டங்கள் எவை?

ஆ) வெளிநாட்டு நிதியிடலுக்கு மற்றும் பேச்சுவார்த்தைக்கு குறிப்பீடு செய்ய வேண்டிய கருத்திட்டங்கள் எவை?

இ) அரச தனியார் கூட்டுப் பங்காண்மைக்கு குறிப்பீடு செய்ய வேண்டிய கருத்திட்டங்கள் எவை?

ஈ) உள்நாட்டு வங்கி நிதியிடலுக்கு குறிப்பீடு செய்ய வேண்டிய கருத்திட்டங்கள் எவை?

உ) நிலவுகின்ற வளத் தட்டுப்பாடுகளின் காரணமாக எதிர்கால அமுல்படுத்தலுக்கு கருத்திற்கொள்ள வேண்டிய கருத்திட்டங்கள் எவை?

**3.2 இறுதி அங்கீகாரம்**

இப்படிமுறையில் சாத்தியவள ஆய்வினை வேண்டி நிற்கின்ற கருத்திட்டத்தின் முழுமையான செயற்பரப்பு அல்லது கருத்திட்டத்தின் மாற்றங்கள் உத்தேச நிதி மூலதன பொறிமுறையுடன் அங்கீகரிக்கப்படும். சாத்தியநிலை ஆய்வானது இறுதி மதிப்பீட்டுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கருத்திட்டம் பரிந்துரைக்கப்பட்டதும் இறுதி அங்கீகாரத்துக்காக அதனைக் குறித்த நிரல் அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட முடியும். அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் வெளிநாட்டு நிதி மூலதனத்துக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் நன்கொடையாளருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும்.

கருத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் அத்திட்டம் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படும். நிரல் அமைச்சானது வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு குறித்த கருத்திட்டத்தை உரிய காலத்தில் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

## 4. சாத்தியவள ஆய்வுகள்

சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ள உதவுமாறு வெளிநாட்டு உதவியை கோரும் சந்தர்ப்பங்கள் இருக்க முடியும். எனினும், அவ்வாறான சாத்தியவள ஆய்வுகள் உரிய அரச நிறுவனத்தின் ஈடுபாடு மற்றும் உடைமையுடன் மேற்கொள்ளப்படுவது அத்தியாவசியமானது.

முன்னைய அல்லது விரிவான சாத்தியவள ஆய்வுகள் தேவைப்படாத கருத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் குறித்த கருத்திட்டம் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்கு அல்லது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## 5. கருத்திட்டங்களின் முன்னுரிமைப்படுத்தல்

கருத்திட்ட முன்னுரிமைப்படுத்தலானது கீழ் குறிப்பிடுகின்ற மூன்று படிமுறைகளினூடாக நெறிப்படுத்தப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.

1. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிரல் அமைச்சின் ஆலோசனை மற்றும் அமைச்சர்களுக்கான கருத்திட்ட இருப்புநிலையின் (Project pipelines) அடிப்படையில் துறை ரீதியிலான கருத்திட்ட இருப்புநிலை தயாரிக்கப்படல் வேண்டும். கருத்திட்டப் பிரதேசத்தின் முன்னுரிமைப்படுத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பிரமாணங்கள் பின்னிணைப்பு 2 இல் இணைக்கப்பட்டுள்ளது.

2. தயாரிக்கப்பட்ட துறை ரீதியிலான இருப்புநிலை பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் கூட்டிணைப்பதை தேசிய திட்டமிடல் திணைக்களம் மேற்கொள்ளும். மீளமைக்கப்பட்ட பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு வருடமும் ஜுலை 31இல் வெளியிடப்படும்.

3. பொது முதலீட்டுக் குழுவினால் (PIC) பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் முன்னுரிமைப்படுத்தலானது உத்தேச அரச நிதி முகாமைத்துறைச் சட்டத்தின் கீழ் அமைய வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த சட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் தேசிய திட்டமிடல் திணைக்களம் உரிய அக்கறைதாரர்களுடன் இணைந்து கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தும்.

## 6. வெளிநாட்டு நிதியிடல்

உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியானது (ODA) அரசாங்க முதலீட்டு சேவையில் தொடர்ந்து குறிப்பிடத்தக்க வகிபங்கை மேற்கொள்கின்றது. நிரல் அமைச்சுக்களிலிருந்து அனுப்பப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகள் அதிகரித்திருப்பதனால் கடந்த காலங்களில் வெளிநாட்டு நிதியிடலுக்கான கேள்வி கணிசமாக அதிகரித்துள்ளது. எனினும், வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான சட்டம் மற்றும் நிறுவன ரீதியான கட்டுப்பாடுகள், தேசிய வரவு செலவுத்திட்டத்தின் உள்ளீர்ப்பு இயலளவு, அவ்வாறே நீண்ட காலத்தில் கடன் நீடிப்புத்திறத்தினை நிர்வகிப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு உள்ளடங்கலாக பல காரணங்களால் அதிகரிக்கும் முன்மொழிவுகளின் வீதத்திலேயே குறுகிய காலத்தில் வெளிநாட்டுக் கடன் மட்டங்களை அதிகரிப்பது கடினம். எனவே, நிரல் அமைச்சுக்கள் வெளிநாட்டு நிதியிடலுக்குப் கருத்திட்ட

முன்மொழிவுகளின் முன்னுரிமைப்படுத்தல்களை இனங்காண வேண்டுமென்றும் உள்நாட்டு நிதி மூலதனத்துக்குப் பொருத்தமான கருத்திட்ட முன்மொழிவுகளை வெளிநாட்டு நிதியிடலுக்கு சமர்ப்பிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமெனவும் வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

6.1 கருத்திட்ட உருவாக்கத்தின் கருப்பொருள்கள் மற்றும் முன்னுரிமைப்படுத்தல்களை தேசிய கொள்கை சட்டகத்தின் வழிநின்று இனங்காணும் முழுமையான பொறுப்பு நிரல் அமைச்சுக்களுக்கு / நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையினால் இச்செயன்முறைக்கான நன்கொடையாளரின் ஈடுபாடானது குறிப்பான தேவைகளின் அடிப்படையில் கருத்திட்ட எண்ணக்கருவுக்கு உத்தேச ஏற்புடைமை கிடைக்கப்பெற்றதன் பின்னரே கருத்திற்கொள்ளப்படும். எனவே, எந்த அரசாங்க நிறுவனமும் வெளிநாட்டு நிதி மூலதனத்துக்காக அபிவிருத்தி கருத்திட்டங்களை உருவாக்குவதற்கு கருத்திற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களுக்கு முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது நன்கொடையாளருடன் நேரடியாகச் செயற்பட முடியாது.

6.2 பருவின நிதி விளைவுகள், வெளிநாட்டு கடன்களின் செலவு, வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் வினைதிறன் மிகு பயன்பாடு, கடன் கொடுப்பவரின் நிபந்தனைகள் (பணம் சார்ந்த மற்றும் பணம் சாராத), செல்லுபடியாகும் செயன்முறைகள், குறித்த கடன் கொடுப்பவர்களுடனான தொழினுட்ப வல்லுநர்களின் கிடைப்பனவு, கடப்பாடு மற்றும் மீளசெலுத்துதல் இயலுமை, கொள்வனவு ஆற்றல் மற்றும் அரச தனியார் கூட்டுப் பங்காண்மை உள்ளடங்கலாக ஏனைய நிதியியல் முறைமைகளுக்கெதிராக வெளிநாட்டு நிதியிடலுக்கான கருத்திட்டத்தின் பொருந்துகை என்பவற்றை உரிய முறையில் ஏற்றுக்கொள்ளாது நிரல் அமைச்சுக்களும் அரசாங்க நிறுவனங்களும் ஏற்றுமதி கடன் நிறுவனங்கள் உள்ளடங்கலாக அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வெளிநாட்டு நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்ட முன்மொழிவுகளை அடிக்கடி உருவாக்குவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறை அரசாங்கத்தின் வெளிநாட்டு நிதியுதவி மூலோபாயத்தையும் வரவு செலவுத்திட்ட செயன்முறையையும் பலவீனப்படுத்தியுள்ளதுடன் நீண்ட காலத்தில் இவ்வகையான கருத்திட்டங்கள் தொடர்பாக நிலைபேற்றுப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

6.3 வெளிநாட்டு நிதியிடலைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சொத்துத் தளத்தையும் கடன் தீர்வுவழிகளுக்கு ஒத்துழைக்கும் விதத்தில் வரி வருமானம் மற்றும் ஏனைய வருமான மூலங்களின் அதிகரிப்புக்கு வழிகோலும் வகையில் எதிர்கால வருமான மூலங்களை உருவாக்கும் பொருளாதார நடவடிக்கைகளையும் உருவாக்கும் என அரசாங்கத்தின் வெளிநாட்டு நிதியிடல் மூலோபாயம் ஏற்றுக்கொண்டுள்ளது.

6.4 அதிகரித்த பரிமாற்றச் செலவுகள், அதிகமான சிறிய மற்றும் தற்காலிக கருத்திட்டங்களிலுள்ள கருத்திட்ட / நிகழ்ச்சித்திட்ட முகாமை சம்பந்தமான சிக்கல்கள், வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு வழங்கப்படுகின்ற அதிக பணத்தொகை, அதிகமான வெளிநாட்டு தூதுக்குழுக்கள் மற்றும் நன்கொடையாளரால் செயற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற காரணங்களால் நன்கொடையாளர்களின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படுகின்ற சிறிய கருத்திட்டங்கள் ஊக்குவிக்கப்படமாட்டாது. எனவே, ரூபா 100 மில்லியனுக்கும் குறைவான மொத்த மதிப்பீட்டுச் செலவினத்தைக்கொண்ட கருத்திட்டங்களுக்கு அபிவிருத்தி பங்காளர்களின் உதவியை எதிர்பார்க்காது இடைக்கால வரவு செலவுத்திட்ட சட்டகத்தினூடாக (MTBF) நிதியுதவி பெற்றுக்கொள்ள வேண்டுமென ஊக்குவிக்கப்படுகின்றது. அவ்வாறே, அதிகமான வெளிநாட்டு இறக்குமதி

உள்ளடக்கப் பொருட்களை கொண்ட கருத்திட்டங்களுக்கும் தொழினுட்ப உள்ளீடுகளில் கவனம் செலுத்தும் கருத்திட்டங்களுக்கும் வெளிநாட்டு நிதியிடலைப் பெற்றுக்கொள்வதே சிறப்பானது.

6.5 வெளிநாட்டு நிதியிடலைத் மூலத்தைத் தீர்மானிக்கையில் பல்வேறு பொருளாதாரத் துறைகள் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களிலுள்ள பல்வேறு கடன் கொடுக்கும் நிறுவனங்களின் ஈடுபாட்டின் அனுகூலங்களை கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும். நிதியுதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு சாத்தியமான மூலங்களைத் தீர்மானிக்கும் போது கடன் செலவுகள், கடந்தகால அனுபவம், முறைகளும் செயன்முறைகளும், குறித்த கடன் கொடுப்பவர்களிடம் இருக்கின்ற தொழினுட்ப வல்லுனர் என்பன முக்கியமாக கருத்திற்கொள்ள வேண்டிய சில விடயங்களாகும். வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது அரசாங்கத்துக்கும் அபிவிருத்தி பங்காளர்களுக்குமிடையில் இடம்பெறும் வருடாந்த ஆலோசனை செயன்முறையின் போது அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை குறித்த கடன் கொடுக்கும் நிறுவனங்களின் கடன்கொடுக்கும் வழங்குநிலை கடனளிப்பில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஒரு அபிவிருத்தி பங்காளரின் இடைக்கால கடன்கொடுக்கும் வழங்குநிலை கடனளிப்பில் கருத்திட்ட முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அதே கருத்திட்டத்துக்கு வேறு ஒரு அபிவிருத்தி பங்காளரிடமிருந்து நிதியுதவி கோர முடியாது மூல கருத்திட்ட வடிவமைப்பில் ஒன்றில் செலவில் அல்லது நலனில் கணிசமான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமென உதவி பேச்சுவார்த்தைகளில் இனங்காணப்பட்டால் இத்தகைய மாற்றங்களைக் கூட்டிணைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6.6 முறைமையாகக் கோரப்படாத முன்மொழிவுகள் தொடர்பாக படிமுறைகள் மற்றும் செயன்முறைகளை நிர்ணயித்துள்ள பெறுகை வழிகாட்டல்களை கருத்திற்கொள்வது அத்தியாவசியமானது.

மூன்று வருட இடைக்கால வரவு செலவுத்திட்டமாக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத்திட்டமானது இடைக்காலத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைக் கருத்திற்கொண்டு அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளைத் யதார்த்த பூர்வமாக வடிவமைப்பதற்கு நிரல் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு அதிக நெகிழ்வுத்தன்மைகளை வழங்குகின்றது.

இச்சுற்றுநிருபம் 2019 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும். இச்சுற்றுநிருபம் தொடர்பான எத்தகைய தெளிவுபடுத்தல்களையும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி : 0112-484612 / 0112-484576 அல்லது மின்னஞ்சல் : dgnp@npd.treasury.gov.lk).

**ஒப்பம்** / வீ. சிவஞானசோதி
செயலாளர்

பிரதிகள் :

1. ஜனாதிபதி செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. தலைவர், நிதி ஆணைக்குழு
6. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
8. பணிப்பாளர் நாயகம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்